*World Christian Fellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# இயேசுவின் ஊழிய காலம்

***மத்தேயு 4:12-17, யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய், 13. நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார். 14. கடற்கரையருகிலும் யோர்தானுக்கு அப்புறத்திலுமுள்ள செபுலோன் நாடும் நப்தலி நாடும் ஆகிய புறஜாதியாருடைய கலிலேயாவிலே, 15. இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று, 16. ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. 17. அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.***

*மத்தேயு தன்னுடைய வம்சவரலாறு அட்டவணையில் ராஜாவுடைய முற்பிதாக்களை வரிசைப்படுத்துகிறார்.*

*அந்த ராஜா பிறப்பின் மூலமாய் பூமியில் உதித்தல்.*

*சாஸ்திரிகள் அவரை பணிந்துகொள்ள வரும்போது, ராஜா மகிமைப்படுத்தப்படுதல்.*

*அந்த ராஜா பழைய ஏற்பாட்டின் அனைத்து தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலாய் அறிவிக்கப்படுதல்.*

*ராஜாவுக்கு வழியை ஆயத்தம்பண்ணும் யோவான் ஸ்நானகனைக் குறித்து அறிவித்தல்.*

*அவருடைய ஞானஸ்நான சம்பவத்தின்போது அவர் ராஜா என்று உறுதிப்படுத்தப்படுதல்.*

*இந்த ராஜாவின் தற்போதைய செய்கைகள்.*

*சோதனையின் இறுதியில் ராஜா தன்னை மெய்யான ராஜாவாய் ஸ்தாபித்துக்கொள்ளுகிறார். அவர் சோதிக்கப்படுகிறார்.*

*கிறிஸ்துவே பெரிய ராஜா. அவர் தன்னை நிரூபித்த பின்பே தன்னுடைய ஊழியத்தைத் தொடருகிறார்.*

***வச.12, யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய்,***

*11ஆம் வசனத்திற்கும் 12ஆம் வசனத்திற்கும் இடையில் ஒருவருட காலம் இடைவெளி உள்ளது.*

*இயேசு சோதிக்கப்பட்டதிலிருந்து கலிலேயா ஊழியத்தின் துவக்கம் வரைக்கும் என்ன சம்பவித்தது என்ற முழு தகவலும் நம்மிடத்தில் உள்ளது.*

*யோவான் அதை தன்னுடைய சுவிசேஷத்தில் 1:19லிருந்து 4:42 வரை பதிவுசெய்துள்ளார்.*

*மத்தேயு இந்த காரியங்களைக் குறித்து விவாதிக்கவில்லை. ஏனென்றால் இயேசுவை ராஜாவாய் அறிவிப்பதே மத்தேயுவின் பிரதான நோக்கமாயிருந்தது. அதற்கு முன் நடந்த இந்த சம்பவங்களை யோவான் பதிவுசெய்துள்ளார்.*

***யோவான் 1.***

*வனாந்திரத்தில் அந்த பிரம்மாண்டமான வெற்றியைத் தொடர்ந்து, யோவான் ஸ்நானகன் பிரசங்கித்து, ஞானஸ்நானம் கொடுக்கும் இடத்திற்கு இயேசு வருகிறார். இயேசு தன்னுடைய ஊழியத்தைத் துவக்குவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்.*

***யோவான் 1:19, எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று கேட்டபொழுது,***

*யோவான் ஸ்நானகன் அவரை குறிப்பிட்டு அடையாளம் காண்பித்தது யூதர்களுடைய பார்வையில் மிகவும் முக்கியமான ஒன்று.*

*முதலாம் நாள்.*

***யோவான் 1:26-27, யோவான் அவர்களுக்கு பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். 27. அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்.***

*மேசியா இங்கே இருக்கிறார் என்று யோவான் சொல்லுகிறார்.*

*அவர் உங்கள் நடுவில் நின்றுகொண்டிருக்கிறார்.*

***யோவான் 1:29-30, மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. 30. எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர் தான்.***

*இரண்டாம் நாள் இயேசு மக்களின் நடுவில் நின்றுகொண்டிருக்கவில்லை. அவர் யோவானை நோக்கி நகருகிறார்.*

*முதலாம் நாள், "உங்கள் நடுவிலே நிற்கிறார்."*

*இரண்டாம் நாள், "இதோ (அவர்)" என்று யோவான் சொல்லுகிறார்.*

***யோவான் 1:35-37, மறுநாளிலே யோவானும் அவனுடைய சீஷரில் இரண்டுபேரும் நிற்கும் போது, 36. இயேசு நடந்துபோகிறதை அவன் கண்டு: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான். 37. அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின்சென்றார்கள்.***

*முதலாம் நாள் யோவான் சொல்லுகிறார், அவர் "உங்கள் நடுவிலே நிற்கிறார்."*

*இரண்டாம் நாள், "இதோ (அவர்)" என்கிறார்.*

*மூன்றாம் நாள், "அவரைப் பின்பற்றுங்கள்" என்கிறார்.*

*யோவான் தன்னுடைய சீஷர்களைப் பார்த்து, "நீங்கள் அவரைப் பின்பற்றுங்கள்" என்கிறார். இயேசு பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாட்டிற்கும், யோவான் ஸ்நானகனிடத்திலிருந்து தன்னிடத்திற்கும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறார்.*

*யோவான் ஸ்நானகனின் சீஷர்கள் இயேசுவை பின்பற்றினர். இயேசு அவர்களை தன்னுடைய சீஷர்கள் என்று அழைத்தார்.*

***யோவான்** 1:38-51, இயேசு தன்னுடைய முதல் கூட்ட சீஷர்களை அழைக்கிறார். அந்திரேயா, யோவான், பேதுரு, பிலிப்பு மற்றும் நாத்தான்வேல். அவர் முதல் கூட்டத்தைக் கூட்டி அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்.*

***அங்கிருந்து இயேசு எங்கு போனார்?***

*அவர் ஒரு கலியாணத்திற்கு போகிறார்.*

***யோவான்** 2:1-11ன் படி, அவர் கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு போகிறார்.*

*கானா ஊர் கலிலேயாவின் வடதிசையில் அமைந்துள்ளது. ஆகையால் அவர், யோவான் ஞானஸ்நானம் கொடுத்த இடத்திலிருந்து புறப்பட்டு, எரிகோவுக்கு இறங்கி, வனாந்திரத்தைக் கடந்து, பீடபூமியின் வழியாக நடந்து, மலைகளைக் கடந்து, அந்த மலைகளின் மறுதிசையாகிய மேற்கு திசையிலும்; பிரயாணப்பட்டு, கலிலேயா கடலின் மேற்கு திசையில் நடந்து, கானா என்ற சிறிய ஊரில் நடைபெறும் கலியாணத்திற்கு வந்துசேருகிறார்.*

*இயேசு அங்கே கொஞ்ச காலம் தங்கியிருந்தார்.*

***யோவான் 2:12, அதன் பின்பு அவரும் அவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும் அவருடைய சீஷரும் கப்பர்நகூமுக்குப்போய், அங்கே சில நாள் தங்கினார்கள்.***

*கலிலேயாவிலுள்ள இந்த கானா ஊரிலிருந்து புறப்பட்டு கலிலேயாவின் மேற்கு திசையில் பத்து மைல் தூரம் நடந்து கப்பர்நகூம் என்னும் சிறிய ஊருக்கு வந்து அங்கு சில நாட்கள் தங்கினார்.*

*யோர்தானிலிருந்து கானாவுக்கும், அங்கிருந்து கப்பர்நகூமுக்கும் போகிறார்.*

***யோவான் 2:13, பின்பு யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய்,***

*இயேசு எருசலேமுக்குப் போகிறார்.*

*அங்கு போனவுடன் ஆலயத்தை பரிசுத்தம்பண்ணுகிறார். மேசியா தன்னுடைய ஆலயத்திற்கு திடீரென்று வருவார் என்று சகரியா தீர்க்கதரிசி முன்னறிவித்துள்ளார்.*

*அவர் ஆலயத்திற்கு வந்து, சாட்டையை சுழற்றி, ஆலயத்தை சுத்தப்படுத்தி தன்னை அதிகாரப்பூர்வமாய் ஸ்தாபிக்கிறார்.*

*யோவான் 3ஆம் அதிகாரம், நிக்கொதேமு.*

*மறுபடி பிறத்தலைக் குறித்து நிக்கொதேமுவுடன் அவர் ஓர் அழகான உரையாடலை நிகழ்த்துகிறார்.*

***யோவான் 3:22-24, இவைகளுக்குப்பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவாகளோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங் கொடுத்துவந்தார். 23. சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங்கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். 24. அக்காலத்தில் யோவான் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை.***

*யோவானும் இயேசுவும் ஓரே நேரத்தில் பிரசங்கிக்கவும் ஞானஸ்நானம் கொடுக்கவும் செய்தனர்.*

*மாற்றம் இன்னும் முழுமையாகவில்லை.*

*அது இன்னும் முழுமையாய் கைமாற்றப்படவில்லை.*

*யோவான் ஸ்நானகன் சிறையிலடைக்கப்படும்வரை அவர் தன் ஊழியத்தைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தார். தேவன் அவருடைய ஊழியத்தை அவ்வாறே முடித்து வைக்கிறார். அவர் கடினமான, வெளிப்படையான, தைரியமான, ஆக்ரோஷமான ஒரு பிரசங்கியார். அவரை யாராலும் கட்டுப்படுத்த முடியாது என்பதை தேவனும் அறிந்திருக்கலாம். எனவே அவரை சிறையிலடைத்து அவருடைய ஊழயத்தை நிறைவுசெய்கிறார்.*

*யோவான் அவருடைய வேலையை செய்து முடித்தார். அவர் ராஜாவை முன்னறிவித்துவிட்டார். அவரை யார் என்றும் அடையாளங்காட்டிவிட்டார். அவரை பின்பற்றும்படிக்கு மக்களிடத்திலும் கூறிவிட்டார். இயேசு எருசலேமுக்கு வந்து தன்னை யார் என்றும் அறிவித்துவிட்டார். அவர் தன்னுடைய ஆலயத்திற்கு வந்துவிட்டார். அவர் ஆலயத்தை பரிசுத்தமாக்கிவிட்டார். அவர் கலிலேயாவுக்கு போனார். அங்கு அவர் அற்புதம் செய்து தன்னை யார் என்று நிரூபித்து விட்டு, கப்பர்நகூமில் போய் இளைப்பாறுகிறார். யோவான் தொடர்ந்து பிரசங்கித்துக்கொண்டிருந்தபோதே, இயேசுவும் தன்னுடைய சீஷர்களைக் கூட்டிக்கொண்டு தன்னுடைய ஊழியத்தை செய்துகொண்டிருந்தார். இப்போது அவருடைய வேலையை துவங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.*

*இது யோவான் வெளியேறவேண்டிய தருணம். இயேசு உள் நுழைய வேண்டிய தருணம். அதைத் துவங்குவதற்கு தான் கலிலேயாவுக்குப் போக வேண்டும் என்பது இயேசுவுக்கு தெரியும்.*

***யோவான் 3:30, அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.***

*யோவான் 4ஆம் அதிகாரத்தில், இயேசு தன்னுடைய வேலையை முழுமூச்சுடன் கையில் எடுக்கிறார்.*

*யோவான் 4:1-4,* ***யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது,*** *2.* ***யூதேயாவைவிட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப் போனார்.*** *3.* ***இயேசு தாமே ஞானஸ்நானங்கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்.*** *4.* ***அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடியால்,***

*இயேசு கலிலேயாவில் தன்னுடைய ஊழியத்தை அதிகாரப்பூர்வமாய் துவக்குகிறார். இயேசு தன்னை எருசலேமில் பிரதிபலித்துவிட்டார். அவர் தன்னுடைய சீஷர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டிவிட்டார். கானா ஊரில் அவர் செய்த அற்புதத்தின் மூலமாக சீஷர்களுக்கு தன்னை யார் என்று காண்பித்துவிட்டார்.*

*யோவானுடைய ஊழியத்திற்கு தேவன் முடிவைக்கொண்டு வந்து, தன்னுடைய ஊழியத்தை அவர் துவக்கும் வரைக்கும் இயேசு காத்திருக்க வேண்டியதாயிருந்தது. அந்த காலம் வந்துபோது, யோவான் சிறைச்சாலைக்கு கொண்டுபோகப்படுகிறார். இயேசு கலிலேயாவுக்குப் போகிறார்.*

*அவர் கலிலேயாவுக்கு போகும் வழியில், கிணற்றண்டையில் ஒரு ஸ்திரீயைக் காண்கிறார். அவள் யூதர்கள் அனைவராலும் இழிவுபடுத்தப்பட்ட ஒரு பெண். அவள் ஒரு சமாரிய ஸ்திரீ. பாதி இஸ்ரவேலன், பாதி புறஜாதி. புறஜாதியை திருமணம் செய்துகொண்டு யூத மார்க்கத்தை கனவீனப்படுத்துகிறவர்களை யூதர்கள் இழிவாய் கருதினர்.*

*அந்த ஸ்திரீக்கு தான், இயேசு தன்னை கிறிஸ்துவாய் அறிமுகப்படுத்துகிறார். வேதாகமத்தில் இயேசு தன்னை கிறிஸ்து என்று அறிமுகப்படுத்திக்கொண்ட முதல் நபர் அந்த ஸ்திரீயே.*

*இயேசு அந்த ஸ்திரீயை சந்தித்தார். அவள் வசித்த அவளுடைய சிறிய கிராமமாகிய சிகார் என்னும் கிராமமே எழுப்புதலுக்கு வித்திட்ட முதல் கிராமமாய் மாறியது.*

*அந்த சிகார் கிராமத்திலிருந்து இயேசு தன் பயணத்தைத் தொடர்ந்தார்.*

*யோவான் 4:46-47,* ***பின்பு, இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்.*** *47.* ***இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவிற்கு வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டபோது, அவரிடத்திற்குப் போய், தன் மகன் மரண அவஸ்தையாயிருந்தபடியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்.***

*இயேசு வடதிசையில் பயணம் செய்கிறார். அவர் சமாரியா வழியாகக் கடந்து போகிறார்.*

*அவர் மீண்டும் கானா ஊருக்கு வருகிறார்.*

*ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய மகன் கப்பர்நகூமில் வியாதியாயிருக்கிறான். அந்த மனிதன் வடதிசையில் இன்னும் தூரத்தில் இருந்தான்.*

*இயேசு தன்னுடைய ஊழியத்தைத் துவங்குவதற்கு கலிலேயாவுக்கு போகிறார்.*

*மத்தேயு 4:12,* ***யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய்,***

*சமாரியஸ்திரியை வழிநடத்தியதைக் குறித்து யோவான் பதிவுசெய்கிறார். அவர் கலிலேயாவுக்கு போகும் வழியில் ராஜாவின் மனுஷனுடைய மகனை குணப்படுத்துகிறார்.*

*அந்த இடைபட்ட தருணங்களை கணக்கிட்டால், அது இயேசுவின் ஊழியத்தில் ஏறத்தாழ ஒரு வருடத்தை உள்ளடக்கியுள்ளது.*

*அவர் முதன்முதலில் தன்னுடைய மேசியாத்துவத்தை சுவிசேஷமாய் அறிவித்து இரட்சிப்பிற்குள் நடத்திய ஜனங்கள் யூதர்கள் இல்லை என்பது நம்மை ஆச்சரியப்படுத்துகிறதல்லவா?*

*மத்தேயு இவைகள் எதையும் பதிவுசெய்யவில்லை. ஏனென்றால், இயேசுவை ராஜாவாய் அறிவிப்பதே அவருடைய பிரதான குறிக்கோள். வழியை ஆயத்தம்பண்ணும் யோவான் ஸ்நானகன் சிறைக்கு சென்றபோதே இயேசுவின் அதிகாரப்பூர்வமான ஊழியம் துவங்குவதாக மத்தேயு அறிவிக்கிறார். யோவானுடைய கதை முடிந்த பின்பே, ராஜா வருகிறார்.*

*யோவான் சிறையிலடைக்கப்படுகிறார். இயேசு தன்னுடைய ஊழியத்தைத் துவக்குகிறார். இயேசுவின் அதிகாரப்பூர்வமான ஊழியம் கலிலேயாவில் துவங்குகிறது. அங்கே தான் ஒளி உதயமாகிறது. அங்கே தான் பகல் நட்சத்திரம் எழும்பியது. அதிகாலையின் விடிவெள்ளி நட்சத்திரம் அங்கேதான் முதன்முதலாக உதயமானது.*

***ஏன்?***

*கலிலேயா இருண்ட ஒரு பகுதி. இருள் அதிகமாய் சூழ்ந்த பகுதிக்கே முதலில் ஒளி தேவைப்படுகிறது.*

*இயேசு கிறிஸ்துவின் ஒப்பில்லா மகத்துவத்தை பிரதிபலிக்க அவரை ஒளிக்கு ஒப்பிட்டு கூறியிருப்பது எனக்கு மிகவும் பிடிக்கும்.*

***மத்தேயு 4:16, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.***

*இயேசுவை ஒளியாய் சித்தரித்தது வேத ஆசிரியர்கள் மத்தியில் பிரபலமான ஒரு பார்வை.*

*நமக்கு மிகவும் பிரியமான யோவான் சுவிசேஷம்.*

*அதில் யோவான் இயேசு கிறிஸ்துவை ஒளியின் சுபாவத்தோடு சித்தரிக்கிறார்.*

*யோவான் 1:4-5, அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. 5. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.*

***யோவான் 1:7-9, அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்க வந்தவனாயிருந்தான். 8. அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்க வந்தவனாயிருந்தான். 9. உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.***

***யோவான் 3:19-21, ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை***

*விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. 20.* **பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்.** *21.* **சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்.**

***யோவான் 9:5, நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.***

***யோவான் 12:35-36, அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக் காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்; இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான். 36. ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார். இவைகளை இயேசு சொல்லி, அவர்களை விட்டு மறைந்தார்.***

***யோவான் 12:46, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்.***

*இயேசு தன்னை ஒளியாய் அடையாளப்படுத்திக்கொண்ட இடத்தை யோவான் தேர்வுசெய்கிறார்.*

***யோவான் 8:12, மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.***

*இது ஆச்சரியமான ஒரு அறிக்கை.*

***இந்த அறிக்கை எங்கே சொல்லப்பட்டது?***

***யோவான் 8:20, தேவாலயத்திலே இயேசு உபதேசம் பண்ணுகிறபோது, தருமப்பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வசனங்களைச் சொன்னார். அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை.***

*ஆலயத்தின் தருமப்பெட்டியிருக்கும் இடமானது பெண்கள் வரக்கூடிய வெளிப்பிரகாரம்.*

*கூடாரப் பண்டிகை முடியும் நேரம் அது. கூடாரப்பண்டிகையின் போது, இஸ்ரவேல் ஜனங்கள் ஆலயத்தின் ஒளி என்னும் முறைமையை ஆசரிப்பது வழக்கம். ஆலயத்தின் நடுவே அநேக மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து இரவு முழுவதும் ஆசரிப்பது வழக்கம். எனவே அதை ஏற்றிவைப்பதற்காக பெண்கள் அங்கே வந்து, அந்த வாரம் முழுவதும் அதை ஆசரிப்பது வழக்கம்.*

*வனாந்திரத்தில் தேவன் இஸ்ரவேலர்களை மேகஸ்தம்பத்தினாலும் அக்கினி ஸ்தம்பத்தினாலும் வழிநடத்தியதை நினைவுகூருவதற்காய் இந்த கூடாரப் பண்டிகை ஆசரிக்கப்பட்டது. அவர்களை வனாந்திரத்தில் நடத்தி வந்த பெரிய ஒளியை நினைவுகூருவதற்காய் அப்பண்டிகை கொண்டாடப்பட்டது.*

*அந்த பெண்களின் பிரகாரத்திற்கு இயேசு வருகிறார். அங்கே ஒளி இல்லை. கூடாரப்பண்டிகை முடிந்துவிட்டது. ஆனால் மீதியானவர்கள் அங்கேயே இருந்தனர். மெழுகுவர்த்தியேற்றும் விளக்குகள் அங்கே அமைதியாயிருந்தது. ஒன்றும் ஒளிரவில்லை. இயேசு அந்த காட்சியின் நடுவில் நடந்துசென்று, அந்த தருணத்தை*

*தனதாக்கிக்கொள்ளுகிறார். எருசலேமில் ஏழுநாட்களுக்கு முன்பு எரிந்துகொண்டிருந்த அந்த விளக்கைக் குறித்து அந்த மக்கள் மிக நன்றாய் அறிந்திருந்தனர். இயேசு அவர்களின் நடுவில் வந்து நின்று "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" என்றார்.*

*அவர் மக்களின் கவனத்தை தன்னிடமாய் திருப்புகிறார் என்றும் சொல்லலாம்.*

*இயேசுவே ஒளி. மனிதன் இருளிலிருக்கிறான் என்று வேதாகமம் சொல்லுகிறது. அதை மீண்டும் மீண்டும் சொல்லுகிறது. மனிதன் அந்தகார இருளில் இருக்கிறான் என்பதை ஆரம்பத்திலிருந்து முடிவு வரை வேதம் போதிக்கிறது.*

***நீதிமொழிகள் 2:13, அந்தகார வழிகளில் நடக்க நீதிநெறிகளை விட்டு,***

*அதுவே மனிதனுடைய வாழ்க்கை விதி. அவனால் அதை அறியமுடியாது. அவனால் ஒளியை பார்க்கமுடியாது.*

***நீதிமொழிகள் 4:19, துன்மார்க்கருடைய பாதையோ காரிருளைப்போலிருக்கும்; தாங்கள் இடறுவது இன்னதில் என்று அறியார்கள்.***

***நீதிமொழிகள் 4:18, நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்.***

*அதேபோன்று பாவிகளுடைய பாதையானது, இருளில் நடப்பதுபோன்றது என்று சித்தரிக்கப்பட்டுள்ளது.*

***மத்தேயு 6:23, உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!***

***லூக்கா 22:53, நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனேகூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கைநீட்டவில்லை; இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்றார்.***

*விரோதிகளுக்குப் பின்னால் செயல்பட்ட வல்லமை,*

*அவர் கைதுக்கு பின்னால் செயல்பட்ட வல்லமை,*

*சிலுவையில் அடிக்கப்படுதலுக்கு பின்னால் செயல்பட்ட வல்லமை*

*ஆகிய அனைத்தும் அந்தகாரத்தின் வல்லமை – சாத்தானுடைய வல்லமை என்பதை*

*கிறிஸ்து நேர்த்தியாய் அறிந்திருந்தார்.*

***2 கொரிந்தியர் 4:6, இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.***

***எபேசியர் 5:11, கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்.***

***எபேசியர் 6:12, ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும்,***

*வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.*

*1 பேதுரு 2:9, நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.*

*ஆகையால் உலகம் அந்தகாரப்பட்டுள்ளது.*

*ஒழுக்க ரீதியான அந்தகாரம்,*

*ஆவிக்குரிய அந்தகாரம்,*

*அறியாமை,*

*தேவனை அறியமுடியாதிருத்தல்,*

*சத்தியத்தை அறிமுடியாதிருத்தல்,*

*சரி எதுவென்று தெரிந்தும் தன் சுபாவத்தை மாற்றிக்கொள்ள முடியாதிருத்தல்.*

*தேவன் மனிதனுக்கு இரண்டு மெழுகுவர்த்திகளைக் கொடுத்துள்ளார்.*

*அதில் ஒன்று சிருஷ்டிப்பு என்னும் மெழுகுவர்த்தி,*

*மற்றது மனசாட்சி என்னும் மெழுகுவர்த்தி.*

*ஆனால் வெகுகாலத்திற்கு முன்பே மனிதன் அந்த இரண்டு மெழுகுவர்த்திகளையும் அணைத்துவிட்டு முழுமையான இருளில் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிறான்.*

*ரோமர் 1:19-21, தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். 20. எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. 21. அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.*

*மனிதன் தன் பாவத்தினால், தேவன் எங்கேயிருக்கிறார் என்றும், சத்தியம் எது என்பதை அறியும் இரண்டு விளக்குகளை மங்கியெரியச் செய்கிறான்.*

*அவன் துணிந்து பாவம் செய்வதினால் நம்பிக்கை என்னும் விளக்கை ஊதி அணையச்செய்கிறான்.*

*வச. 12, யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய்,*

*இயேசுவின் வாழ்க்கையில் நேரத்தின் மகத்துவம் என்பது ஆச்சரியமான ஒன்று. அவர் தெய்வீக காலஅட்டவணையின் படியே செயல்படுகிறார்.*

*இயேசுவின் இருதயத்தில் நித்தியத்தின் கடிகாரம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அவருடைய வாழ்க்கையின் முடிவை சர்வவல்லவரின் கரங்கள் துல்லியமாய் அறிவிக்கிறது. அவர் தன்னுடைய தெய்வீக கால அட்டவணையின்படியே செயல்பட்டார். எல்லாவற்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்தார்.*

*யோவான் சுவிசேஷம் முழுமையிலும் இயேசு அவ்வப்போது என் வேளை இன்னும் வரவில்லை என்று குறிப்பிடுவதை பார்க்கமுடியும்.*

*தீடீரென்று என் வேளை வந்துவிட்டது என்று இயேசு ஒரு நாள் சொல்லுகிறார்.*

***யோவான் 13:1, பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்.***

***யோவான் 17:1-2, இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: 2. பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.***

*அவர் தெய்வீகத்தின் துல்லியமான வேளையை அறிந்திருந்தார்.*

*சரித்திரத்தைக் குறித்த தேவனுடைய நம்பமுடியாத மற்றும் ஆச்சரியமான துல்லியத்தை நாம் காணும்படிக்கு, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலை மத்தேயு பெற்றிருந்தார். இது இயேசு கிரியை செய்யத் துவங்கும் காலம்.*

*“என்று இயேசு கேள்விப்பட்டு”*

***யோவான் காவலில் வைக்கப்பட்டார் என்னும் தகவலை கேள்விபடும்வரை இயேசு காத்திருக்கவேண்டியது அவசியமாயிருந்ததா?***

*ஒவ்வொரு மனிதனின் இருதயத்திலும் என்ன இருக்கிறது என்பதை அவர் அறிந்திருக்கிறார்.*

*அவர் அவருடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை உபயோகித்து, ஒரு சராசரி மனிதன் அறிந்ததைக் காட்டிலும் அதிகம் அறிந்துகொள்வதற்கு முற்படவில்லை. அவருடைய மாம்சமாகுதலில் அதுவும் ஒரு அங்கம்.*

*எருசலேமிலிருந்த அனைவரும் யூதேயாவிலிருந்த அனைவரும் அங்கு சென்றார்கள் என்றும் பரிசேயர்களும் அங்கு இருந்தனர் என்பதையும் மத்தேயு ஏற்கனவே அறிவித்துள்ளார். சதுசேயர்களும் அங்கே இருந்தனர். எல்லோரும் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று, அவருடைய செய்தியை கேட்பதற்காய் அங்கு வந்திருந்தனர்.*

*அவர் பிரபலமாய் இருந்தார். பிரபலத்தின் அலைகளில் அவர் பயணம் செய்துகொண்டிருந்தார்.*

***என்ன சம்பவித்தது?***

*யூதர்கள் அவருக்கு ஆதரவாய் இல்லையா?*

*அவர் எப்படி காவலில் வைக்கப்பட்டார்?*

*எல்லாவற்றிற்கும் மேலாக, மக்கள் மத்தியில் இந்த அளவிற்கு பிரபலமாகவும் மக்களின் செல்வாக்கையும் சுதந்தரித்த இவரைப் பிடித்து காவலில் வைக்குமளவிற்கு அதிகாரிகள் பதட்டமாயிருக்கமாட்டார்களா?*

***லூக்கா 3:19-20, காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது தன் சகோதரனான பிலிப்புவின் மனைவி ஏரோதியாளினிமித்தமாகவும், தான் செய்த மற்றப் பொல்லாங்குகளினிமித்தமாகவும், யோவானாலே கடிந்து கொள்ளப்பட்டபோது, 20. தான் செய்த மற்றெல்லாப் பொல்லாங்குகளும் தவிர, யோவானையும் காவலில் அடைத்துவைத்தான்.***

*ஏரோது என்பது பெரிய பெயர். அது எல்லா தரப்பு மக்களையும் உள்ளடக்கிய ஒரு பெயர். பல ஏரோதுகள் வாழ்ந்தனர்.*

*அவர்கள் எல்லோரும் அகுஸ்துராயனைப் போன்றவர்கள்.*

*அவர்கள் எல்லோரும் பார்வோனைப் போன்றவர்கள்.*

*''காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது''*

*நான்காம் இடத்தில் ஆட்சியமைத்தவர்.*

*அவனுடைய இயற்பெயர், ஏரோது அந்திபாஸ்.*

*காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது, ஏரோது அந்திபாஸ்.*

*அதைச் செய்தது பரிசேயர்கள் அல்ல.*

*சதுசேயர்கள் அல்ல.*

*மக்களும் அல்ல.*

*அதைச் செய்தது இந்த யூதனல்லாத, அந்நிய இடுமேய ராஜாவாகிய ஏரோது. ரோமர்களால் இஸ்ரவேலை ஆளுகை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட இவனுடைய தகப்பனாகிய ஏரோது ராஜாவிற்கு பின்பு இந்த அந்திபாஸ் அந்த ஸ்தானத்திற்கு ஏற்படுத்தப்பட்டான்.*

உலகத்தின் இந்த குறிப்பிட்ட பகுதியை ஆளுகை செய்வதற்கு ரோமர்கள் யூதனல்லாத இந்த இடுமேய ராஜாவாகிய ஏரோதை ஏற்படுத்தியிருந்தனர். ஆனால் முழு இஸ்ரவேலுக்கும் ராஜாவாகிய இந்த ஏரோது மரித்த பின்பு, அவனுக்கு பல குமாரர்கள் இருந்தனர்.

ஆட்சி செய்த முழு பகுதியையும் அவனுடைய குமாரர்களுக்கு பங்கிட்டு கொடுத்தான்.

அதில் முதலாவது அர்கேலாஸ். தெற்கேயிருந்த யூதேயாவையும் சமாரியாவையும் இவன் ஆட்சி செய்தான்.

இரண்டாவது மகன் பிலிப்பு. அவன் காற்பங்கு தேசாதிபதி பிலிப்பு என்றும் அழைக்கப்பட்டான். இத்துரேயா என்ற பகுதியில் இவன் ஆட்சிசெய்தான்.

மூன்றாவது மகன், அந்திபாஸ். அவன் கலிலேயாவையும் பெரேயாவையும் ஆட்சி செய்தான்.

யூதேயாவும் சமாரியாவும் தெற்கில் இருக்கிறது.

இத்துரேயா வடதிசையில் அமைந்துள்ளது.

கலிலேயாவும் பெரேயாவும் மத்தியில் அமைந்திருக்கிறது.

ஆகையால் ஏரோது அந்திபாஸ் என்பவனே கலிலேயாவின் பகுதிகளையும் பெரேயாவின் பகுதிகளையும் ஆட்சிசெய்து வந்தான்.

ஏரோதுக்கு பல மனைவிமார்கள் இருந்தனர். அவனுடைய குமாரர்கள் அனைவரும் வெவ்வேறு தாய்க்கு பிள்ளையாய் பிறந்தவர்கள். அவர்கள் தங்கள் சொந்த இரத்த உறவுகளுக்குள்ளேயே திருமணம் செய்துகொண்டனர்.

வம்ச வரலாற்றைப் படிக்கும் எவரும் ஏரோதுவின் வம்சாவழியை தெரிந்துகொள்ள அதிக கடினப்படுவர்.

கலிலேயாவை ஆட்சிசெய்த இந்த ஏரோது அந்திபாஸ், ஏரோது மன்னனுக்கும் மால்தேஸ் என்னும் ஸ்திரீக்கும் பிறந்தவன். ஏரோதுவின் இன்னொரு மனைவியின் பெயர் மரியம்னே. முதலாம் மரியம்னே – பின்னர் இரண்டாம் மரியம்னேவை திருமணம் செய்துகொண்டார்.

ஏரோதுக்கும் மால்தேஸ_க்கும் பிறந்தவனே இந்த ஏரோது அந்திபாஸ். அவருக்கு பிலிப்பு என்ற சகோதரர் இருந்தார். இது காற்பங்கு தேசாதிபதியாகிய பிலிப்பு இல்லை. அவர் தன்னுடைய இரண்டு குமாரர்களுக்கும் பிலிப்பு என்றே பேரிட்டார். ஏனென்றால், மரியம்னே என்று பெயரிடப்பட்ட இரண்டு மனைவிகளைக் குறித்து யாரும் கண்டுபிடிக்கக்கூடாது என்று அப்படி பெயரிட்டார்.

எரோது அந்திபாஸ_க்கு, பிலிப்பு என்று தன் தகப்பனாகிய ஏரோதுக்கும் வேறொரு தாய்க்கும் பிறந்த ஒரு சகோதரன் இருந்தான். பிலிப்பு தன் தகப்பனால் அதிகம் வெறுக்கப்பட்ட துன்மார்க்கமான பிள்ளையாய் இருந்ததினால், அவனுக்கு எந்த பங்கும் கொடுக்கப்படவில்லை. அவன் ரோமிற்கு சென்று ஒரு ரோம பிரஜையாகவே வாழ

*நேரிட்டது. அவன் செல்வந்தனாயிருந்தான். ஆனால் எந்த ராஜ அதிகாரத்தையும் அவனால் சுதந்தரிக்க முடியவில்லை. அவனுக்கு எந்த வகையான ராஜ்யமும் கொடுக்கப்படவில்லை. அவன் ஒரு சாதாரண குடிமகன்.*

*அவனுக்கு ஏரோதியாள் என்று துன்மார்க்கமான, ஒழுக்கக்கேடான ஒரு மனைவி இருந்தாள். ஆகையால் பிலிப்பு என்ற இந்த நபர், ஏரோதின் வம்சாவழியில் வந்த, எந்த ராஜ அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ளாத ஒரு சாதாரண மனிதனாய் ரோமில் வசித்தவன். அவனுடைய மனைவியாகிய ஏரோதியாளுக்கு சலோமி என்ற மகள் இருந்தாள். அவள் நடனமாடி, யோவான் ஸ்நானகனின் தலையை தட்டில் கொண்டுவரச்செய்தாள். அவள் தொட்டதை விளங்காமல் செய்யக்கூடிய இழிவான பெண்.*

*ஏரோதியாள், ஏரோது ராஜாவின் மற்ற மனைவிகள் வழி வந்த அவனுடைய பேத்தி. பிலிப்பு தன்னுடைய மருமகளையே மணந்தான். அதாவது, ஏரோதுவின் குமாரர்களில் ஒருவனுடைய மகளே இந்த ஏரோதியாள். அவனுடைய குமாரனாகிய பிலிப்பு, அவனுடைய சகோதரனுடைய மகளை, அதாவது தன் மருமகளையே திருமணம் செய்துகொண்டான். இந்த நம்பமுடியாத காரியங்கள் இவர்களின் குடும்பங்களில் நிகழ்ந்துள்ளது.*

*தன்னுடைய சகோதரனின் மகளாகிய ஏரோதியாளை மணந்த சகோதரனைப் பார்க்க* ***ஏரோது அந்திப்பாஸ்*** *ரோமுக்கு கடந்துசெல்லுகிறான். இன்னும் அசிங்கமாய், அவனுடைய சகோதரனுடைய மனைவியாயிருந்த ஏரோதியாளினால் ஈர்க்கப்பட்டு, ஏற்கனவே இருந்த ஒழுங்கீனத்தின் மீது ஒழுக்கீனத்தை செய்யத் துணிந்தான். ஏரோதியாளுடன் அவன் விபச்சாரம் செய்து, அவளுடைய கணவனாகிய பிலிப்புவை விவாகரத்து செய்ய வைத்து, அவளை மணந்துகொண்டான்.*

*யோவான் ஸ்நானகன் அதை சரியென்று ஏற்கவில்லை.*

*அவர் துணிச்சலான, தைரியமான, பலம்வாய்ந்த தேவ மனிதன்.*

*ஏரோது அந்திபாஸ் அவரைப் பிடித்து காவலில் வைத்தான். வெகு நாட்கள் கழித்த பின்னரே, மத்தேயு 14ல், சலோமி நடனம் ஆடி, யோவானின் தலையை தட்டில் வைத்து கொண்டுவரச் செய்தாள். அதுவரை அவர் மக்கேரஸ் என்ற இடத்தில் ஒரு குப்பையான சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்.*

*இதுவே தேவனுடைய சரியான வேளையாகவும் இருந்தது. யோவான் காவலில் வைக்கப்பட்ட நேரத்தில் இயேசுவும் கலிலேயாவுக்கு புறப்படுகிறார்.*

*யோவான் காவலில் வைக்கப்பட்டதை கேள்விப்பட்டதும் இயேசு கலிலேயாவுக்கு புறப்படுகிறார்.*

### *இயேசு பயந்தாரா?*

*ஏரோது அந்திபாஸ் தனக்கும் அந்தபடியே செய்வான் என்று இயேசு பயந்து கலிலேயாவுக்கு ஓடினாரா?*

*ஏரோது அந்திபாஸ் கலிலேயாவை ஆட்சி செய்தான். அப்படியென்றால் இயேசு தவறான வழியில் போயிருக்கவேண்டும். அவர் தன்னைக் காத்துக்கொள்வதற்கு ஓடியிருந்தால்,*

*அர்கேலாஸ் ஆட்சி செய்த பகுதிக்கோ அல்லது காற்பங்கு தேசாதிபதியாகிய பிலிப்பு ஆட்சி செய்த எல்லைக்கோ ஓடியிருக்கவேண்டும்.*

*ஏரோதுக்கு பயந்து இயேசு ஓடவில்லை. எந்த ஏரோதும் இயேசுவின் இருதயத்திற்கு பயத்தை ஏற்படுத்த முடியாது. யாரும் அதை செய்ய முடியாது.*

***இயேசு ஏன் அங்கு சென்றார்?***

*யோவான் ஏரோதினால் சிறைவைக்கப்பட்டபோது யூத தலைவர்கள் என்ன எண்ணினார்கள்? அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அதை தடுக்க அவர்கள் முயற்சிக்கவில்லை. யோவான் காவலில் வைக்கப்பட்டதை எண்ணி அவர்கள் 100சதவிகிதம் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். இயேசுவுக்கு அது தெரியும். அவர்கள் தடுக்க முயற்சித்தால் அது மக்களை பயமுறுத்தும் என்று அவர்கள் அஞ்சியதால் அவர்கள் அதைச் செய்யவில்லை.*

***யோவான் 4:1-3, யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங்கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது, 2. யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார். 3. இயேசு தாமே ஞானஸ்நானங்கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்.***

*யோவான் தனக்கென்று அநேக சீஷர்களை வைத்திருந்தது அவர்களுக்கு பிடிக்கவில்லை. எனவே யோவான் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டதைக் கண்டு அவர்கள் மகிழ்ந்தனர். யோவான் செய்ததைக் காட்டிலும் இயேசு அதிகமாய் செய்திருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரியும் என்பதை இயேசு அறிந்திருந்தபோதிலும், அவருக்கும் என்ன நேரிடும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.*

*ஆனால் அது அவருடைய வேளை இல்லை.*

*அவர் எருசலேமில் கைப்பற்றப்படுவதற்கான தருணம் அதுவல்ல.*

*பரிசேயர்களோடு விவாதம் செய்யும் நேரம் அதுவல்ல.*

*தேவனுடைய கடிகாரத்தின்படி, நாட்காட்டியின் படி, அது இயேசுவின் வேளை அல்ல.*

*அவருடைய வேளை வரும்போது அந்த பரிசேயர்களையும், சதுசேயர்களையும், மார்க்க தலைவர்களையும் இயேசு சந்திப்பார்.*

*யோவான் 18ஆம் அதிகாரத்தில் கெத்செமனேயில் அவரை பிடிப்பதற்காய் வருகிறார்கள்.*

*ஏரோதைக் குறித்து பயந்து அவர் அங்கிருந்து ஓடிப்போகவில்லை. பரிசேயர்களைக் கண்டு அவர் பயந்து அங்கிருந்து ஓடிப்போகவில்லை. அதற்கு முன்னான நெருக்கடியை தவிர்ப்பதற்காகவே அவர் கலிலேயாவுக்குப் போகிறார்.*

*அவருடைய ஊரான நாசரேத்தில் வைத்து அவரைக் கொல்ல தீர்மானித்தபோதும் அதே காரியம் சம்பவிக்கிறது. அவர்கள் பார்வையில் படாமல் இயேசு அங்கிருந்து போய்விட்டார். அவர் அங்கிருந்து மறைந்துபோனார். அவருடைய பாடுகளுக்கும் மரணத்திற்கும் குறித்த நேரம் இதுவல்ல. அவர்கள் யோவானைக் குறித்து என்ன எண்ணினார்கள் என்று இயேசு அறிந்தபோது, யோவானின் காவலைக் குறித்து அவர்கள் மகிழ்ந்தார்கள் என்பதையும் அவர்கள் யோவானை வெறுக்கிறார்கள் என்பதையும் இயேசு அறிந்திருந்தார்.*

*எனவே அவர் கலிலேயாவுக்கு கடந்து செல்லுகிறார்.*

***அவர் கலிலேயாவுக்கு வந்தபோது, அவர் கடந்துசென்ற முதல் இடம் எது?***

*மலையின் புருவத்தில் இருக்கும் சிறிய நாசரேத் பட்டணத்திற்கு கடந்துசெல்லுகிறார்.*

*அவர் நாசரேத்துக்கு கடந்து செல்கிறார். அங்கு என்ன சம்பவித்தது என்பதை லூக்கா நமக்குச் சொல்லுகிறார்.*

***லூக்கா 4:16-22, தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். 17. அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது: 18. கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், 19. கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு, 20. வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி, பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார். ஜெபஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது. 21. அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார். 22. எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டு: இவன் யோசேப்பின் குமாரன் அல்லவா என்றார்கள்.***

***லூக்கா 4:31, பின்பு அவர் கலிலேயாவிலுள்ள கப்பர்நகூம் பட்டணத்துக்கு வந்து, ஓய்வுநாட்களில் ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார்.***

*நாசரேத்து மலைப்பகுதியில் அமைந்துள்ளது. கப்பர்நகூமானது, அதற்கு கீழே வடதிசையில் உள்ள நீர் நிலைக்கு மேலே, கலிலேயா கடலின் வடக்கு நுணியில் அமைந்துள்ளது. அவர் தெய்வீக திட்டத்தின்படியும் தெய்வீக கால அட்டவணையின் படியேயும் செயல்பட்டதால், அங்கே நெருக்கடி ஏற்படாமல் தவிர்த்தார்.*

***மத்தேயு 4:13, நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார்.***

*நாசரேத்தைப் போன்று கப்பர்நகூம் இயேசுவுக்கு மிகவும் பரீட்சையமான இடமில்லை.*

*இயேசு தன்னுடைய ஊழியத்தைத் துவக்குகிறார். யோவான் முடித்த இடத்திலிருந்து இயேசு துவக்குகிறார். அவர் எல்லோருக்குமான சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததால், புறஜாதியினரின் கலிலேயா என்று அழைக்கப்பட்ட கலிலேயாவில் தன்னுடைய ஊழியத்தைத் துவக்குகிறார்.*

*அவருடைய முதல் ஆத்துமா, சமாரிய ஸ்திரீ.*

*அவருடைய முதல் பட்டணம், சமாரியவிலுள்ள சிகார்.*

*அவருடைய முதல் அற்புதம், எருசலேமிலில்லை; கானா ஊர் கல்யாணத்தில்.*

*அவருடைய முதல் சுகம், கலிலேயாவில் இருந்த ராஜாவின் மனுஷனுடைய மகனை குணப்படுத்தியது.*